**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 96** **நாள் : 14.02.2026**

**மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், இன்று நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட மருத்துவ முகாமில் 57 பயனாளிகளுக்கு ரூ.48.72 இலட்சம் மதிப்பீட்டிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், திரு.வி.க.நகர் மண்டலம், பெரம்பூர் எவர்வின் வித்யாஷ்ரம் சீனியர் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் இன்று (14.02.2026) நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட சிறப்பு மருத்துவ முகாமில் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்புத் திட்டங்களில் ஒன்றான "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட முகாம் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 14 மண்டலங்களில் நடத்தப்பட்டது. இதன் மூலமாக 34,621 மருத்துவப் பயனாளர்கள் பயன்பெற்றுள்ளனர்.

இதன் தொடர்ச்சியாக, இன்று 15வது கட்டமாக திரு.வி.க.நகர் மண்டலத்தில் நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமில் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்து, பொதுமக்களுக்கு வழங்கப்படும் மருத்துவச் சேவைகள் மற்றும் கை மற்றும் கால் இழந்த மாற்றுத்திறனாளிகளுக்கு செயற்கை கை, கால் உள்ளிட்ட அவயங்கள் வழங்கிட ஏதுவாக கை, கால் அளவீடுகள் எடுக்கப்படுவதைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 8 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.1.05 இலட்சம் மதிப்பீட்டில் பேட்டரியால் இயங்கும் மடக்கு சக்கர நாற்காலிகள் ரூ.8.40 இலட்சம் மதிப்பீட்டிலும், 30 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.1.08 இலட்சம் மதிப்பிட்டில் இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்கள் ரூ.30.54 இலட்சம் மதிப்பீட்டிலும், 5 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.5.58 இலட்சம் மதிப்பீட்டில் நவீன செயற்கை அவயங்கள் என மொத்தம் 43

மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.44.53 இலட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவி உபகரணங்களை வழங்கினார். மேலும், முகாமில் கலந்து கொண்ட 2 மாற்றுத்திறனாளிகளுக்கு அடையாள அட்டையினை வழங்கினார்.

தொடர்ந்து, தொழிலாளர் நலத்துறையின் சார்பில் மானியத்தில் ஒரு பெண் பயனாளிக்கு ரூ.1 இலட்சம் மதிப்பீட்டில் புதிய ஆட்டோவும், ரூ.20,000 மதிப்பீட்டில் ஒரு பயனாளிக்கு இ-ஸ்கூட்டரையும் வழங்கினார். கட்டுமான தொழிலாளர் நல வாரியத்தின் சார்பில் உறுப்பினர் இயற்கை மரணத்திற்கு ரூ.55 ஆயிரமும், சாலை விபத்து மரணத்திற்கு ரூ.2.05 இலட்சத்திற்கான உதவித்தொகைக்கான ஆணையும், உயர்கல்வி பயிலும் உறுப்பினர் மகனுக்கு ரூ.5 ஆயிரம் உதவித்தொகை, 12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற உறுப்பினர் மகனுக்கு 2 நபருக்கு தலா ரூ.3 ஆயிரம் உதவித்தொகை, பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற உறுப்பினர் மகனுக்கு ரூ.2,400 உதவித்தொகை, உறுப்பினர் மகளின் திருமணத்திற்கு ரூ.20 ஆயிரம் உதவித்தொகை, கட்டுமான மற்றும் அமைப்புசாரா ஆட்டோ ஓட்டுனர் 5 நபர்களுக்கு தலா ரூ.1200 மதிப்பீட்டில் முதியோர் ஓய்வூதியத் தொகைக்கான ஆணைகள் என 14 பயனாளிகளுக்கு ரூ.4.19 இலட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

பின்னர் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முகாமிற்கு வருகை தரும் பொதுமக்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளையும், சிறந்த மருத்துவ சேவைகளையும் வழங்கிட மருத்துவர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா, திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.தாயகம் கவி, மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, மண்டலக்குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர் திருமதி புனிதவதி எத்திராஜன், மாநகர நல அலுவலர் டாக்டர் எம். ஜெகதீசன், தொழிலாளர் உதவி ஆணையர் (சமூக பாதுகாப்பு) திருமதி சு.ப.சாந்தி, வடசென்னை மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் திரு.சரவணகுமார் மற்றும் அலுவலர்கள் மருத்துவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**